II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**MCOP. No. 667 of 2012**

Deposition of witness for the Petitioner / PW 1
solemnly by S.Ramanujam, Translator
in accordance with the provision of Act I for 1873 on 21/09/2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | D.Duraimurugan | Caste | : | |
| Father's / Husband's Name | : | Duraigannan | Calling | : | |
| Age | : | | Religion | : | |
| Village | : | | Taluk | : | |

முதல் விசாரணை–

நான் இந்த வழக்கின் மனுதாரர். என்னுடைய பிரமாண பத்திரத்தினை இன்று தாக்கல் செய்கின்றேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அதில் உள்ள விவரங்கள் உண்மையானவை. பிரமாணப் பத்திரத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களாக கீழேகண்ட ஆவணங்களை குறியீடுசெய்ய வேண்டுகின்றேன்.

முதல் தகவல் அறிக்கை அசல் ம.த.சா.ஆ.1. ஜெயா மருத்துவமனையின் மருத்துவ குறிப்பாணை சான்றிட்ட நகல் ம.த.சா.ஆ.2. பார்வதி மருத்துவமனையின் விடுவிப்பு அறிக்கை ம.த.சா.ஆ.3. காப்பீட்டு பத்திரத்தின் நகல் ம.த.சா.ஆ.4. மருத்துவ கட்டணம் ரூ.81,828/– கான ரசீது ம.த.சா.ஆ.5. எனது ஆதார் அடை நகல் ம.த.சா.ஆ.6. எனது வங்கி கணக்கு புத்தக நகல் ம.த.சா.ஆ.7. புகைப்படம் ம.த.சா.ஆ.8. வாடகை கார் கட்டண பில் ரூ.900/–. எனவே மனுப்படி தீர்ப்பாக வேண்டுகின்றேன்.

2வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–

சம்பவத்தன்று நான் ஓட்டி வந்த வாகனத்தை ஓட்ட எனக்கு செல்லத்தக்க ஓட்டுனர் உரிமம் இல்லை என்று சொன்னால் சரிதான். சம்பவத்தன்று நான் எனது வாகனத்தை மது அருந்திவிட்டு ஓட்டினேன் என்று சொன்னால் சரியல்ல. எனது

வயது, வருமானம், தொழில் ஆகியவற்றை காட்ட நான் எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து சம்பவத்தின் போது இரண்டு வாகனங்கள் எதிர் எதிரே மோதியதால் தான் விபத்து நடைபெற்றது என்று சொன்னால் சரிதான். ஆனால் நான் சரியான பாதையில் எனது வாகனத்தை ஓட்டிச்சென்றேன். நான் மருத்துவமனையில் தொடர் சிகிச்சையில் இருந்ததற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய வருமானத்தை கூட்டி காட்டினால் தான் எனக்கு எதிக இழப்பீடு கிடைக்கும் என்பதற்காக 2012 ஆண்டு நான் பெயின்டர் வேலைப்பார்த்து மாதம் ரூ.12 ஆயிரம் சம்பாதித்ததாக கூறியிருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.